<u>ஆரணி நகராட்சி</u>

<u>சாதாரணக் கூட்டம்</u>

2021-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2021-ந்தேதி வியாழன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர்

<u>பொருள் எண்</u> 1.

ஆரணி நகராட்சி சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை வரி விதிப்புஎண்: 038/539 R. மணிமேகலை என்பவர் கடையினை ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே 2021 – 2022 செப்டம்பர் முதல் கணினியில் வரி விதிப்பு என்னை நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

<u>பொருள் எண்</u> 2

ஆரணி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் 'B' மற்றும் பழைய பேருந்து நிலையம் 'C' பிரிவு ஆகிய இரண்டு பேருந்து நிலையம் அங்கிகாரம் புதுப்பித்தல் குறித்து பொது பணி துறை திருவண்ணாமலை அவர்களிடம் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று வழங்குமாறு கோரப்பட்டது.

மேற்படி கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்த சான்று வழங்க தங்கள் துறை மூலம் இத்துறைக்கு அரசு ஆணை எண்: 181/ பொதுப்பணி (ஜி2) துறை/நாள்: 16.05.2003 ஆணையின்படி ரூ.10,000/- நூற்று வீத கட்டணமாக செலுத்தினால் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.10,000/- செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்கோப்பு எண்: 6434 /2012/அ3 2.அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றுமேற்படி தொகையை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

<u>பொருள் எண்</u> 3

மாவட்ட ஆட்சி தலைவர் திருவண்ணாமலை உத்தரவில் இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தடுக்கும் பணிக்கு தடுப்பூசி போடும் மெகா சிறப்பு முகாம் 26/09/2021 அன்று நடைபெற்றது 4 தடுப்பூசி போடும் மையங்களில் பந்தல் போட்டதற்கு ராசி சவுண்ட் சர்வீஸ்க்கு ரூ. 10,100/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்: 611/2021/எச்-1

<u>பொருள் எண்</u> 4

ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தனியார் மயம் மூலம் 1 முதல் 18 வார்டுகளில் Black Cat Solution நிறுவனம் மூலம் தூய்மை பணிகள் செய்துவந்த நிலையில் அந்த நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்துவிட்டதால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – 28 அனுமதிபெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரி வேறு நிறுவனத்திடம் பணி விடும் வரை 1 முதல் 18 வார்டுகளில் மல்லிகை சுயஉதவிக்குழு மூலம் தூய்மை பணி செய்வதற்கு உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>.1.**மன்றம் அனுமதிக்கலாம்.**2.**அவசர அவசியம் கருதி மல்லிகை சுயஉதவிக்குழுவிற்கு 1 முதல் 18 வார்டுகளில் தூய்மை பணிகள் செய்ய உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 264/2020/எச்1**

<u>பொருள் எண்</u> 5

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் ACE ஆட்டோ TN 97 – 1839 யை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவு ரூ 1,10,000 /– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கபடுகிறது .

**<u>அலுவலக குறிப்பு</u>** 1.மன்றம் அனுமதிக்கலாம் . 2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகோரியதை மன்றம் ஏற்கலாம்

கோப்பு எண் . 1104/2021/எச்1.

<u>பொருள் எண்</u> 6

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு கொரோனா நோய் தடுப்பு பணிக்காக பிளிச்சிங் பவுடர் 5 டன் மற்றும் lime Powder 3500 kg ஆகியவை திருப்பத்தூர் அக்ரோ வாங்கியதற்கு GST உட்பட்ட ரூ. 366095/– யை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கபடுகிறது .**<u>அலுவலக குறிப்பு</u>** 1.மன்றம் அனுமதிக்கலாம் .2. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகையை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

கோப்பு எண்: 438/2020/எச்1

<u>பொருள் எண்</u> 7

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மினிலாரி TN 25 BY 7803க்கு 26.09.2021ந் தேதியோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஒரு ஆண்டுக்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ. 34663/– செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>.1.**மன்றம் அனுமதிக்கலாம்.2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்

**கோப்பு எண். 634/2016/எச்1**

<u>பொருள் எண்</u> 8

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டிராக்டர் TN 25 W 6280க்கு 27.09.2021ந் தேதியோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. மேலும் ஒரு ஆண்டுக்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ. 12193/– செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>.1.**மன்றம் அனுமதிக்கலாம்.**2.**தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 634/2016/எச்1**

<u>பொருள் எண்</u> 9

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் ACE ஆட்டோ TN 97 1839யை பழுது நீக்கம் செய்ய 30.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **1.** | ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ்<br>77B, மத்தலாங்குளத் தெரு<br>திருவண்ணாமலை | ரூ. 1,09,800/– |
| **2.** | திருமலை வெங்கடேஸ்வரா ஒர்க் ஷாப்<br>திண்டிவனம் ரோடு திருவண்ணாமலை | ரூ. 1,14,880/– |

**<u>அலுவலக குறிப்பு</u>:–1.**மன்றம் அனுமதிக்கலாம்.

2.தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 1104/2021/எச்1**

<u>பொருள் எண்</u> 10

ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள BOV வாகனங்களில் உள்ள பேட்டரி மற்றும் மோட்டார்கள் பழுதடைந்து உள்ளதை மாற்றியதற்கு கூடுதல் செலவினம் ரூ. 93,425/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:–1.**மன்றம் அனுமதிக்கலாம்.**2.**தனி அலுவலர் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

**கோப்பு எண். 1103/2021/எச்1**

<u>பொருள் எண்</u> 11

இந்நகராட்சி அறிஞர் அண்ணா சித்த மருத்துவமனைக்கு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகாகவும், சித்த மருத்துவமனைக்கு தேவையான 14 வகையான மருந்துகள் மற்றும் மாத்திரைகள் வாங்கவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் தொகை ரூ. 42150/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>1.**மன்றம் அனுமதி அளிக்கலாம். **2.**அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண். 5783/2007/எச்1**

## ஆரணி நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

2021–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2021–ந்தேதி வியாழன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

| வ.எண். | பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 299 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 2 | 2 | 300 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 3 | 3 | 301 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 4 | 4 | 302 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 5 | 5 | 303 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 6 | 6 | 304 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 7 | 7 | 305 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 8 | 8 | 306 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 9 | 9 | 307 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 10 | 10 | 308 | அனுமதி வழங்கப்படுகிறது. |
| 11 | 11 | 309 | அனுமதி வழங்கப்படுகிறது. |

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.